மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கப்பல் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதாக இருந்தால் கடற்கரைக்கு பக்கத்திலே அமைப்பார்கள். கப்பலிலே வேலை செய்யும் பணியாளர்களுக்கு குடியிருப்புக் கட்டுவதற்காகத்தான் மண்டபம் பகுதியிலே நிலத்தைக் கேட்டிருக்கிறார்கள்.

சென்னயில் குடியிருக்கும் ஆதி ஆந்திரர் குடிகளுக்கு பட்டா வழங்கும் திட்டம்

*வினா எண் 294 திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னையில் வண்ணான்துறை, கக்கன் காலனி, ஊரூர் பகுதி ஆகிய இடங்களில் ஆதி ஆந்திரர்கள் குடிசைகள் போட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அந்த இடங்களை அவர்களுக்குப் பட்டா வழங்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னையில் வண்ணான் துறை, கக்கன் காலனி, ஊரூர் ஆகிய பகுதிகளில் உள்ள ஆதி ஆந்திரர்கள் நிலம் கேட்டிருக்கிறார்கள்; பலர் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் கொடுக்க ஏற்பாடு ஆகிக்கொண்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி ஆந்திரர்களுக்கு இதுவரையில் தமிழக அரசு வீட்டுமனைப்பட்டாக்களையோ அல்லது நிலப்பட்டாக்களையோ வழங்கியுள்ளதா? ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு எவ்வளவு வழங்கியுள்ளது என அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவரவர்களே, ஆந்திர ஆதி திராவிடர்களில் பெரும்பாலும் சென்னை மாநிலத்திலேதான் இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் இருக்கக் கூடியவர்களின் பட்டியல் என்னிடத்தில் இல்லை. சென்னையில் இருக்கக் கூடியவர்களுக்கு மட்டும் ஏறக்குறைய 900 பேர்களுக்கு அதிகமாக இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 846 பேர்களுக்கு கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1982 பிப்ரவரி 19]

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி ஆந்திரர்கள் புல்லா ரெட்டிபுரம் என்ற இடத்தில் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்; அவர்கள் அனேகமாக அனைவருமே துப்புறவுத் தொழில் இருக்கிறார்கள் என்பது. ஆகவே நகரத்தில் உள்ள எல்லா ஆதி ஆந்திர மக்களுக்கும் வேறு இடம் என்று இல்லாமல், அனைவருக்கும் பட்டா கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:—தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படுமா என்ற கேள்விக்கே இடமில்லை. முன்பே பரிசீலனை செய்யப்பட்டு, 900-க்கு அதிகமான பேர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டு, இன்னும் 800-க்கு அதிகமான பேர்களுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களை பள்ளிபாட நூலில் சேர்க்கும் திட்டம்

*வினா எண் 265—திரு. ஆர். மணிமாறன்.—மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களை பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: — 1982-83 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும் 4 அல்லது 6 ஆம் வகுப்புக்கான தமிழ்ப் பாடநூலில் சேர்க்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9.20)

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் கவிஞரான பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களை 4-வது, 5-வது வகுப்புகளில் சேர்க்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பிறந்தநாளை அரசு விழாவாக நடத்துவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரின் பாடல்களை 4 ஆவது வகுப்பு அல்லது 6 ஆம் வகுப்புக்கான பாடங்களில் சேர்க்கப்படும் என்றுதான் சொன்னேன். அவர்களின் பிறந்தநாள் விழாவினைப் பற்றிக் கேட்டார்கள். தனிக்கேள்வியாகப்போட்டால் விடையளிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி; கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுடைய பாடல்களை பாடப் புத்தகங்களில் வைப்பதுபோல் அமரர் கவிஞர் கண்ணதாசன், இன்றைய மேலவைத் துணைத் தலைவர் புலமைபித்தன் போன்ற சிறந்த கவிஞர்களின் பாடல்களை பாடப்புத்தகங்களில்